பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: புரட்டாசி 26 (12—10—68) சனி ★ வெளியூர்: புரட்டாசி 27 (13—10—68) ஞாயிறு [இதழ்: 97

## விண்வெளியில் அமெரிக்கா

கென்னடி முனை, அக். 12—
விண்வெளியில் அமெரிக்கா ஏவியுள்ள 'அபாலோ' என்ற சந்திர மண்டலப் பயணக் கப்பல் வெற்றிகரமாகப் பூமியைச் சுற்றிவரத் தொடங்கியிருக்கிறது.

மனிதனை சந்திர மண்டலத்துக்கு அனுப்பும் விண்வெளிச் சோதனைக்கு இது முழு முன்னோட்ட ஒத்திகையாகும்.

# கேரள அரசைக் கவிழ்க்கச் சதி

## மக்களை தூண்டிவிடுகிருர் மாநில காங்கிரசுத் தலைவர்

### 'விடுதலைப் போர்' நடத்த நேருமாம்

கொச்சி, அக். 12—
கடந்த செப் 19-ம் நாள் நடைபெற்ற மத்திய அரசு ஊழியர் வேலைநிறுத்தத்தின்போது, கேரள அரசு கடைபிடித்த கொள்கை காரணமாக, மத்திய அரசு ஏதாவது 'நடவடிக்கை'கள் எடுக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக, டெல்லியிலிருந்து இங்கு திரும்பிய கேரள மாநிலக் காங்கிரசுத் தலைவர் டி. ஓ. பாவா பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார்.

**"பிரச்சினை முடிந்துவிட்டதாக யாரும் கருத வேண்டாம்"**

என்று குறிப்பிட்ட அவர், 'மத்திய அரசுக்கும்–கேரள அரசுக்குமிடையே இன்னமும் கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது' என்றும் தெரிவித்தார்.

ஆனால் என்ன நடவடிக்கைகள்—எப்பொழுது எடுக்கப்படும் என்பது குறித்து எதுவும் அவர் கூறவில்லை ---

**"குடியரசுத் தலைவர்தான் அதை முடிவு செய்ய வேண்டியவராக இருக்கிருர்"**

என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிருர்.

"அரசியல் சட்ட நெருக்கடி கேரளத்தில் உருவாகியிருக்கிறது என்று மாநில காங்கிரசு கருதுகிறது?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு,

**"அப்படித்தான் கருதுகிறது"**

என்றும் அவர் பதிலளித்தார்.

"மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்ருல், மாநிலக் காங்கிரசு 'விடுதலைப் போராட்டம்' எதுவும் நடத்த முயற்சி செய்யுமா?"

என்று கேட்கப்பட்டபோது, கேரளக் காங்கிரசுத் தலைவர் அழுத்தந் திருத்தமாக --- ஆனல் மறைமுகமாகக் கூறியிருப்பதாவது :—

"மக்கள் விடுதலைப் போராட்டம் நடத்தவேண்டும் என்று கருதுவார்களானுல் நிச்சயம் அது நடைபெறும்; நிலைமை பொறுமை கடந்து செல்லுமானுல், எப்பொழுது -- என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மக்களுக்குத் தெரியும்."

## தமிழக அரசுக்கு மற்ருெரு பாராட்டு

### மலிவு விலைப் பால் வழங்கு விழாவில் ஜெகஜீவன்ராம்

சென்னை, அக். 12—
"ஏற்கனவே பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகிற தமிழக அரசு, மலிவு விலையில் மக்களுக்குப் பால் கிடைக்கச் செய்யும் மற்ருெரு திட்டத்தைத் துவக்கி வைப்பது கண்டு பாராட்டுகிறேன்"

என்று மத்திய உணவமைச்சர் திரு. செகசீவன்ராம், நேற்று இராயப்பேட்டையில் நடந்த மலிவு விலைப் பால் வழங்கு திட்டத் துவக்க விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழக உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமையில் நடந்த இந்த விழாவில், பொதுப் பணியமைச்சர் திரு. மு. கருணாநிதி, வேளாண்மைத் துறையமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி, சுகாதாரத் துறையமைச்சர் திரு. சாதிக் பாட்சா, செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அண்ணு தொடங்கி வைத்துள்ள சாதி ஒழிப்புப் பணி

## அளவில் பெரிதாகி வெற்றிபெற வேண்டுமென மத்திய அமைச்சர் செகசீவன் ராம் வாழ்த்து

சென்னை, அக். 12—
"இந்தியச் சமுதாயம் பலதரப்பட்ட சாதி -- மத -- இன வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு சமுதாயமாகும்; சாதி பாகுபாடு மட்டுமல்ல -- நாட்டின் பல பகுதிகளுக்கிடையேயும வேறுபாடுகள் உண்டு; இவற்றையும் மீறி வாழ்ந்து வருகிறது இச்சமுதாயம்!

"சாதி விட்டுச் சாதித் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்து -- அப்படி மீறியவர்களை ஒதுக்கிவைத்து -- அவர்களது குழந்தைகளுக்குச் சொத்துரிமை மறுத்து -- சாதிக கொடுமையானது நிலை நிறுத்தப்பட்டு வந்துள்ளது! இந்த நாடு, வேறு எதனைக் காட்டிலும் இந்த சாதிக் கொடுமையினுல்தான் அதிகம் துன்பப்பட்டுள்ளது!

"சாதி முறையால் கீழ்ச் சாதியினர் மட்டுமே துன்பப்பட்டு வருகிருர்கள் என்பதல்ல -- மேல் சாதியினரும் துன்பப்படுகிருர்கள்; இதற்குக் காரணம், 'உயர் சாதிக்காரர்' என்ற மனோபாவத்தால் ஏற்பட்டு விடுகிற சுயதிருப்தியேயாகும்! கீழ்ச் சாதிக்காரர்களின் நிலைபற்றி சொல்லத் தேவையில்லை.

"இந்தச் சமுதாயத்தில் சாதி முறை இருக்கும் வரை இந்நாட்டு மக்கள் பல கூறுகளாகவே இருப்பார்கள்!

"இன்றையத் தேவை என்னவெனில், சாதி முறையின் எல்லா நிலைகளையும் எதிர்த்து முழு மூச்சான போரே ஆகும். இது நடந்தாலன்றி, இந்நாடு வலிமைமிக்கதாக ஆகாது!

"சாதிக் கொடுமையைத் தகர்க்கக்கூடிய ஒவ்வொரு முயற்சியையும் நாம் வரவேற்றுப் போற்றவேண்டும்; என்றேனும் ஒரு நாள் பெரியவர்களெல்லாம் கூடி, சாதிவிட்டுச் சாதி செய்துகொள்ளும் திருமணமே செல்லத்தக்கது என்று கூறிடுவார்களானுல், அந்த நாள் ஓர் நன்னுளாக இருக்கும்!

"காரல் மார்க்சைக் காட்டிலும் -- ஏங்கல்சைக் காடிலும் பெரும் புரட்சிக்காரராக விளங்கிய மகாத்மா காந்தியின் நூற்ருண்டு விழாவைக் கொண்டாடி வருகிருேம்; காந்தியடிகள், தாம் சொன்னதுபோல நடந்தார்!

"இன்றைய விழாவும், பதக்கங்கள் வழங்குவதும் நமது விழைவினைப் பிரதிபலிக்கும் சின்னங்களேயாகும்!

"தமிழக அரசு இந்த நல்ல காரியத்துக்காகப் பாராட்டப்பட வேண்டும் -- மகாத்மா காந்தியின் ஆத்மா இந்த அரசை வாழ்த்தும்.

"இன்று இங்கே பதக்கம் பெறுகிறவர்களும் அதை வழங்குகிறவர்களும் தாங்கள் செய்கின்ற இந்தக் காரியம் சரித்திரத்தில் எத்தனை பெரிய மாற்றத்துக்கு வித்தாக அமையப்போகிறது என்பதை அறிவார்களோ மாட்டார்களோ -- நானறியேன்!

"இந்த நல்ல செயலுக்காக இம்மாநில அமைச்சர்களுக்கும், அவர்களது தலைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த முதலமைச்சர் அண்ணுதுரை அவர்கள், மக்கள் தலைவர்; தொழிலாளர், பின்தங்கிய வகுப்பினர் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறவர்!

"அமெரிக்காவிலே சிகிச்சைக்குப் பிறகு ஓய்வு எடுத்துவரும் அவர் விரைவில் குணமாகி நாடு திரும்ப நாமெல்லாம் பிரார்த்திப்போம்!

"அண்ணுதுரை அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள சாதி ஒழிப்புப் பணி அளவில் பெரிதாகி வெற்றிபெறட்டும்!"

**செகசீவன் ராம்**

(கலப்புத் திருமணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் வழங்கிய விழாவில்)

## இந்தியாவுக்குத் தாய்லாந்து அரிசி

பாங்காக், அக். 11—
தாய்லாந்திலிருந்து இவ்வாண்டில் இரண்டாவது முறையாக பெரும் அளவில் அரிசி வாங்க இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறதாம்.

இவ்வாண்டில் இந்தியா இதுவரையில், தாய்லாந்திலிருந்து 1,40,000 டன் அரிசி வாங்கியிருக்கிறது; இதில் 80,000 டன் அரிசி அரசினர் மூலமும், மீதமுள்ளவை தனியாரிடமிருந்தும் வாங்கப்பட்டவையாகும்; இதில் பெரும் பகுதி கப்பலில் ஏற்றப்பட்டு விட்டது.

## வீரம் வேண்டும்!

"கோழைத்தனத்தை மறைப்பதற்கான ஒரு சாக்குப்போக்கு அல்ல அகிம்சை; அது, வீரர்களின் உயர் குணமாகும். வாளைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய வீரத்தைவிட அகிம்சையைப் பயன்படுத்துவதற்கு அதிக வீரம் வேண்டும்."

—காந்தியார்

# சாதி ஒழிப்புக்குத் தமிழக அரசின் 'கால்கோள் விழா'

## இந்தியத் துணைக்கண்டத்தில் முதல் நிகழ்ச்சி

சென்னை, அக். 12—
கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கமும், பாராட்டு இதழும் வழங்கும் தமிழக அரசின் திட்டத்தை, மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம், நேற்று பாலர் அரங்கில் துவக்கிவைத்தார்.

கலம்புத் திருமணத்திற்காக மாநில அரசு, தங்கப் பதக்கமும் - பாராட்டு இதழும் வழங்குவது என்பது, இந்தியாவிலேயே இதுதான் முதலாவதாகும்; இதற்காக ரூ. 10,000 தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது.

கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், தங்கப் பதக்கமும் -- நற்சான்று இதழும் வழங்கினுர்.

தங்கப் பதக்கம், ஒன்றேகால் பவுன் எடையுள்ளது; பதக்கத்தின் ஒரு பக்கத்தில் திருவள்ளுவர் உருவமும் -- 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் வாக்கும் பொறிக்கப்பட்டிருக்கின்றன; மறுபக்கத்தில், தமிழக அரசின் சின்னமான கோபுரம் சித்தரிக்கப்பட்டு -- அதைச் சுற்றிலும், 'தமிழக அரசு கலப்புத் திருமணப் பரிசு' என்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், விழாவில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், பரிசுத் திட்டத்தின் விவரங்களை விளக்கிக் கூறினுர்.

விழாவில் அமைச்சர்கள் கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி ஆகியோரும் கலந்துகொண்டு பேசினர்.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை டைரக்டர் பி. சங்கரன் நன்றி கூறினுர்.

# குடும்ப பாசத்துடன் இயங்க வேண்டும்!

## முதலாளி -- தொழிலாளி உறவு பற்றி காந்தியார்

**'பசிப் பிணியால் அவதியுறும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கத்திய சோஷலிச வாதமும், கம்யூனிச வாதமும்தான் ஒரே வழி' என்று எண்ணுவது தவறாகும்.**

**கொடுமைப்படுத்தும் எண்ணமும், கொடுமையும் இருக்கும்வரை, கொடுமைப்படுத்துவோருக்கும் --- கொடுமைக்குள்ளாகும் மக்களுக்கும் இடையே ஒத்துழைப்பு இருக்கவேண்டும் என்று நான் ஒருபோதும் சொன்னதில்லை; முதலாளிகளும், பிரபுக்களும் எப்போதுமே கொடுமைக்காரர்கள் என்று நான் நம்பவில்லை; அவர்களது நலன்களுக்கும்---மக்கள் நலனுக்குமிடையே தீராத வெறுப்பு அல்லது பகைமை இருக்கிறது என்ற கூற்றையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை.**

**செல்வந்தர்களையும், முதலாளிகளையும் ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கூற முடியாது; அதுவல்ல இப்போதைய தேவை; அவர்களுக்கும் மக்களுக்கும் இடையே இப்போதுள்ள உறவு முறையை மேலும் தூய்மைப்படுத்த வேண்டும் -- வலுப்படுத்த வேண்டும்.**

**ஒரு சில கோடீசுவரர்களை ஒழித்துக்கட்டுவதன் மூலம் கொடுமைக்குள்ளாகும் ஏழைகளது நிலைமையைத் திருத்திவிட முடியாது. ஏழைகளின் அறியாமையை அகற்றி, அவர்களைக் கொடுமைப்படுத்துவோருடன் ஒத்துழைக்க வேண்டாம் என்று அறிவுறுத்த வேண்டும்; இப்படிச் செய்தால் கொடுமைப்படுத்துவோருக்கும் மனமாற்றம் ஏற்படும்; இறுதியில், ஒரே பணியில் சம பங்காளிகளாக இவர்கள் உழைக்க முடியும் என்றுகூட நான் யோசனை கூறியிருக்கிறேன்.**

**முதலாளித்துவத்தில் தீமை ஏதும் இல்லை; அதைத் தவறாகப் பயன்படுத்துவதில்தான் தீமை இருக்கிறது; ஏதாவது ஒருவிதத்தில், மூலதனத்தை முதலீடு செய்பவர்கள் இருக்கத்தான் வேண்டும்.**

**முதலாளிகளும், தொழிலாளிகளும் பணியை முழுமை பெறச் செய்து -- ஒருவரை ஒருவர் நேசித்து -- உதவி செய்யவேண்டும் என்பதுதான் எனது நோக்கம்; ஒற்றுமையுடன் இசைந்து வாழும் ஒரு பெரிய குடும்பமாக அவர்கள் வாழ வேண்டும்; முதலாளிகள், தொழிலாளர்களின் செல்வ வளப் பெருக்கத்துக்கு மட்டுமன்றி, அவர்களது அற வழி வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும்; தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டும் தர்ம கர்த்தாக்களாக முதலாளிகள் பணியாற்ற வேண்டும்.**

இவ்வாறு, தொழிலாளர் -- முதலாளிகளுக்கிடையே இருக்க வேண்டிய உறவு நிலை குறித்துக் காந்தியார் கருத்தறிவித்துள்ளார். அவருடைய கருத்துரை வருமாறு :—

பொருளாதாரச் சமத்துவம்தான் அகிம்சை முறையிலான சுதந்தரத்திற்கு உயிர்நாடி!

பொருளாதாரச் சமத்துவத்திற்காக உழைப்பது என்றால், 'முதலாளிகளுக்கும் -- தொழிலாளர்களுக்குமிடையே உள்ள தீராத பூசலை அகற்ற வேண்டும்' என்று பொருள்; அதாவது, 'நாட்டின் செல்வத்தின் பெரும் பகுதி எந்த ஒரு சிலரிடம் குவிந்து கிடக்கிறதோ, அந்தச் செல்வந்தர்களின் நிலையை சற்றுத் தாழ்த்தி, அரை வயிற்றுக் கஞ்சிக்குத் திண்டாடும் --- உடுக்க உடையில்லாத இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும்' என்று பொருள்.

தொழிலாளர்கள் வேண்டிய அளவுக்கு ஒன்றுபட்டு எத்தகைய தியாகத்தைச் செய்வதற்கும் ஆயத்தமாக இருந்தால், தொழிலாளர்கள் தங்கள் கொள்கையை நிலைநாட்டி வெற்றி பெற முடியும் என்பது எனது பணிவான கருத்து.

முதலாளிகள் எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தினாலும் சரி— தொழிலாளர்களிடமுள்ள வசதிகள் யாவை என்பதையும், இவற்றை முதலாளிகள் ஒருநாளும் உடமையாக்கிக் கொள்ள முடியாது என்பதையும், தொழிலாளர் நலன் சம்பந்தப்பட்டவர்களும் தொழிலாளர் இயக்கத்தை நடத்துபவர்களும் சரியாக உணரவில்லை என்றே நினைக்கிறேன்.

தொழிலாளர்கள் இல்லாவிட்டால் முதலாளிகளால் எதுவும் செய்ய இயலாது என்பதைத் தொழிலாளர்கள் புரிந்து கொண்டுவிட்டால், தொழிலாளர்கள் நிலைமை உறுதிப்பட்டு விடும்.

'வர்க்கங்களுக்கிடையே போராட்டத்தைத் துவக்க வேண்டும்' என்பதல்ல பிரச்சினை. ஆனால் ஒருவிதத்தில் கௌரவமான வாழ்க்கை பற்றி தொழிலாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

இந்த உலகில் பணம் படைத்தவர்கள் ஒரு சிலரே இருக்கிறார்கள்; பணம் படைத்தவர்களுக்கு எதிராகத் தொழிலாளர்களைத் தூண்டிவிடுவது, வர்க்க வெறுப்பை வளர்த்து அதிலிருந்து வரக்கூடிய தீமைகளை ஊக்குவிப்பதற்கு ஒப்பாகும்.

'பூசல்' என்பது தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்; ஆதலால், இதை எப்படியாவது தவிர்க்க வேண்டும்.

'பூசல்' என்பது பலவீனத்தை ஒப்புக்கொள்வதற்கு ஒப்பாகும்; 'மற்றவர்களைவிட நாம் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்துககு ஒப்பானதாகும்.

தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கைக் கௌரவத்தை உணர்ந்து கொண்டுவிட்டால், பணம் அதன் சொந்த இடத்திற்குச் சென்றுவிடும்; அதாவது, தொழிலாளர்களுக்காகவே பயன்படுத்தப்படும்; ஏனென்றால், உழைப்பு, பணத்தைவிட அதிகச் சிறப்பு வாய்ந்ததாகும்.

வர்க்கப் போர் என்ற தத்துவத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. 'வர்க்கப் போரைத் தவிர்க்க முடியாது' என்று பேசுவோர், அகிம்சையின் பலன்களைப் புரிந்துகொள்ளாதவர்கள்!

மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்த சொல்லழகையும், உள்ளத்தைக் கவரும் முழக்கங்களையும் மட்டுமே தினைத்துக் கொண்டிருக்கவேண்டாம். நமக்கென்று தனியாக ஒரு மரபு இல்லையா? தொழிலாளி—முதலாளி பிரச்சினையில் நாம் நமது சொந்த வழியில் தீர்வுகாண முடியாதா?

### வேலை நிறுத்தங்கள்

தக்க காரணங்களினால், 'நியாயம்' என்று மெய்ப்பிக்க முடியாத வேலை நிறுத்தம் எதுவும் இருக்கக்கூடாது. நியாயமற்ற வேலை நிறுத்தம் வெற்றி பெறக் கூடாது. இத்தகைய வேலை நிறுத்தங்களுக்குப் பொதுமக்கள் ஆதரவு அளிக்கக்கூடாது.

பொருளாதார நிலை மேம்படுவதற்கான வேலை நிறுத்தங்களுக்கு வெளிப்படையான ஓர் அரசியல் நோக்கம் இருக்கக்கூடாது; இத்தகைய சேர்க்கையினால், அரசியல் நோக்கம் ஈடேறி விடாது.

பொது வாழ்க்கையைச் சீர்குலைக்காவிட்டாலும்கூட, தபால் பிரிவு வேலைநிறுத்தத்தில் பொது மக்கள் சேவை தடைப்படக்கூடிய நிலைமை ஏற்படாவிட்டாலும்கூட-இவற்றின்மூலம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோருக்கு இன்னல்கள் ஏற்படும்; அரசாங்கத்துக்கு ஓரளவு பாதகம் ஏற்படலாம்; ஆனால் அரசாங்கமே நிலைநின்றுவிடாது.

செல்வந்தர்கள் தபால் சேவை இல்லாவிட்டாலும்கூட எப்படியாவது சமாளித்துக்கொண்டு விடுவார்கள்; ஆனால், தலைமுறை தலைமுறையாக தபால் சேவையைப் பயன்படுத்திவரும் இலட்சக்கணக்கான ஏழை மக்கள், இத்தகைய ஒரு வேலை நிறுத்தத்தினால் இன்னலுக்குள்ளாவார்கள்.

வேறு எல்லாவிதமான -- நியாயமான வழிமுறைகளும் பின்பற்றப்பட்ட பிறகுதான் இத்தகைய வேலைநிறுத்தம் நடக்க வேண்டும்; நியாயமான வழிமுறைகள் தோல்வியுற்ற பிறகுதான் இதன் உதவியை நாடவேண்டும்.

அரசியல் நோக்களுக்காக வேலை நிறுத்தத்தைப் பயன்படுத்துவது ஒரு தவறான காரியம் என்று கருதுகிறேன். இத்தகைய வேலைநிறுத்தத்தினால் அரசியல் நோக்கங்களை அடையமுடியும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அகிம்சை முறையிலான ஒத்துழையாமைத் திட்டத்தில் இவை இடம்பெற முடியாது.

தொழிலாளர்களை அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்துவது மிகவும் ஆபத்தானது என்பதை விவேகமுள்ளவர்கள் எளிதில் புரிந்துகொண்டு விடுவார்கள். இப்படிச் செய்ய வேண்டுமென்றால், தொழிலாளர் நாட்டின் அரசியல் நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டு, பொது நலனுக்காக உழைக்கத் தயாராக இருக்க தேண்டும்.

வேலைநிறுத்தங்களும் அர்த்தால்களும் நல்ல முறைகள்தாம்; ஆனால் அவற்றை எளிதில் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு விடுவார்கள்.

தொழிலாளர்கள், வலிமை வாய்ந்த தொழிலாளர் சங்கங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்; இந்தச் சங்கங்களின் அனுமதியின்றி எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. ஆலைச் சொந்தக்காரர்களுடன் பேச்சுக்களில் ஈடுபடாமல் அதற்கு முன்னதாகவே வேலை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது. ஆலைச் சொந்தக்காரர்கள் சமரசத்துக்கு முன்வந்தால், நடுவர் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். நடுவர்கள் நியமிக்கப்பட்டுவிட்டால், அவர்களது தீர்ப்பை இருதரப்பினரும் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வன்முறைச் செயலிலோ, கொள்ளையடிப்பதிலோ, தீ வைப்பதிலோ ஈடுபடுவதை அறப்போர் அனுமதிக்காது.

தொழிலாளர்கள் தங்களது எண்ணிக்கையிலோ, பெரும்பான்மை பலத்திலோ அதாவது வன்முறையிலோ நம்பிக்கை வைத்தால், அது தங்களையே அழித்துக்கொள்வதற்கு ஒப்பானதாகும். இவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் தொழில் துறைக்கே தீங்கிழைப்பார்கள்.

நேர்மாறாக, நீதியின் அடிப்படையில் அவர்கள் இயங்கினால் -- நீதியை அடைவதற்காக அவர்கள் இன்னல்களைத் தாங்கிக் கொண்டால் -- அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்பதோடு, அவர்களது எசமானர்களின் மனமாற்றத்திற்கும் வழி துலக்குவார்கள். அதோடு தொழிற்சாலைகள் வளர்ச்சி பெறவும், முதலாளிகளும் தொழிலாளர்களும் ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களாக இசைந்து இயங்கவும் அடிப்படை வகுக்கமுடியும்.

தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கை நிலையை ஏற்றம் பெறச் செய்து -- மேலும் அறிவு பெற்று -- தங்கள் உரிமைகளை நிலைநாட்டி -- தங்களது உழைப்பினால் உருவாகும் செய்பொருள்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்து -- அரசியல் துறையில் தொண்டு செய்ய வேண்டும். ஆதலால் தொழிலாளர்கள் உரிமையாளர்கள் நிலைமைக்கு ஏற்றம் பெறுவதுதான் உரிய மாறுதலாக இருக்கும்.

# அதிருப்தியை அளவுக்கு மிஞ்சி வலியுறுத்தக் கூடாது!

## சனநாயகப் பண்பு வளரச் சகிப்புத் தன்மை வேண்டும்

**" அதிருப்தியாளர்கள், தங்கள் அதிருப்தியை அளவுக்கு மீறி வலியுறுத்தாமல் இருந்து, பெரும்பான்மையினரின் கருத்துக்களை முழுமனத்துடன் ஏற்றுக்கொள்ளும்போதுதான் பெரும்பான்மையினரின் ஆட்சி சிறந்த ஆட்சியாக இருக்க முடியும் "**

என்று, காந்தியடிகள் கூறியிருக்கிறார். 'உண்மையான சனநாயகப் பண்பை வளர்க்க வேண்டுமானால் சகிப்புத்தன்மை வேண்டும்' என்று அவர் ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளார்; அதில் அவர் மேலும் கூறுவதாவது :—

இந்தியாவின் வருங்காலம் மேற்கத்திய நாடுகளின் இரத்த வெறிப் போக்கில் அமைந்திருக்காது; நேர்மாறாக, சாதாரண வாழ்க்கையிலிருந்து வரும் -- இரத்தம் சிந்தாத சமாதானப் பாதையில்தான் இந்தியாவின் வருங்காலம் அமைந்திருக்கும்.

உண்மையான சனநாயகப் பண்பை வளர்க்க வேண்டுமானால், சகிப்புத்தன்மை இருக்க வேண்டும்; சகிப்புத்தன்மை இல்லையென்றால், 'சொந்த இலட்சியத்திலேயே நம்பிக்கை இல்லை' என்று பொருள்.

சகிப்புத்தன்மை இல்லாமை ஒருவிதத்தில் வன்முறைதான்; உண்மையான சனநாயக உணர்வின் வளர்ச்சிக்கு இது தடையாக இருக்கும்.

சகிப்புத்தன்மை என்ற சொல்லே எனக்குப் பிடிக்கவில்லை; ஆனால் இதைவிடச் சிறந்த சொல் கிடைக்கவில்லை.

சகிப்புத்தன்மை என்றால், ஒருவரது சொந்த நம்பிக்கையை விட மற்றவர்களது நம்பிக்கை கீழ்த்தரமானது என்ற கருத்திலிருந்து உருவாவதாக அர்த்தம் வருகிறது.

சரியானதற்கும் தவறானதற்கும்— நல்லதற்கும் கெட்டதற்கும் இடையே உள்ள வேற்றுமைகளை சகிப்புத்தன்மை அகற்றிவிடாது.

'கருத்துச் சுதந்தரமும், செயல் சுதந்தரமும் வேண்டும்' என்று நாம் எப்படி உரிமை கொண்டாடுகிறோமோ, அதே அளவுக்கு மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும்.

அதிகாரத்தை வைத்துக் கொண்டிருக்கும் சிறுபான்மையினரை எப்படிச் சகிக்க முடியாதோ, அதே அளவுக்குக் கட்டாய பலத்தைப் பயன்படுத்தும் பெரும்பான்மை ஆட்சியையும் சகித்துக்கொள்ள முடியாது.

சிறுபான்மையினரை நயமாகச் சொல்லி நமது கருத்தை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவேண்டும்; பொறுமையுடன் இதைச் செய்து முடிக்க வேண்டும்.

சிறுபான்மையினரின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்கும்படிப் பார்த்துக்கொள்வது பெரும்பான்மையினரின் கடமையாகும். பெரும்பான்மையினர்,

(3-ம் பக்கம் பார்க்க)

# உலகப் பெரியார் வரிசையில் அண்ணா

## அவர்தம் அரிய பண்புக்கு நம்மை ஆளாக்கிக் கொள்ளவேண்டும்

### அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

சென்னை, அக். 11—

"'பிறரை மதிக்கக் கற்றுக்கொண்டால்தான், நாம், பிறரால் மதிக்கப்படுவோம்' என்ற தத்துவத்தைக் கடைபிடிப்பவர் அறிஞர் அண்ணா அவர்களாவார்கள்; அந்தப் பண்பை, அண்ணா அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தியாகராயநகர் வாணி மகால் கலையரங்கில், 'அண்ணாவுக்கு அறுபது' என்ற நூலை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார்.

செட்டிநாட்டரசர் திரு. முத்தையா (செட்டியார்) தலைமையில் நடந்த இந்த விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் மேலும் பேசியதாவது:—

"ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில், பட்டிதொட்டிகளெங்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

நாமெல்லாம் அண்ணாவைப் பற்றித் தெரியாமல் இங்கு வந்து தெரிந்து கொள்வதற்காக வரவில்லை; அண்ணாவைப் பற்றிச் சொன்னதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்; அண்ணாவின் அருமை பெருமைகளைச் சொல்லச் சொல்ல, சொல்லுபவருக்கும் மகிழ்ச்சி -- கேட்பவருக்கும் மகிழ்ச்சி!

குழந்தையைக் கொஞ்சினால் ஒரு தடவை கொஞ்சுவதோடு விட்டு விடுவதில்லை; பலதடவையும் கொஞ்சிக் கொண்டுதான் இருக்கிறோம். குழந்தையைக் கொஞ்சும்போது நமக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது --- குழந்தையும் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறது!

அதுபோல், 'அண்ணா' என்ற சொல்லைச் சொல்லும்போதே நமக்குத் தெம்பு ஏற்படுகிறது!

சாதாரண மக்கள்போலன்றி, அறிவுடையோருள் அறிவுடையோராய் — பண்புடையோருள் பண்புடையோராய் -- எழுத்தாளர்களுக்குள் எழுத்தாளராய்—பேச்சாளர்களுக்குள் பேச்சாளராய்—தலைவர்களுக்கிடையில் தலைவராய்—தொண்டர்களுக்கிடையில் தொண்டராய்---கதையாசிரியர்களுக்கிடையில் கதையாசிரியராய்—பெருங் கதையாசிரியர்களுக்கிடையில் பெருங் கதையாசிரியராய்—திரைப் படக் கதையாசிரியர்களுக்கிடையில் திரைப் படக் கதையாசிரியராய் —பல்வேறு துறை அறிஞர்களும் பாராட்டத்தக்கவிதத்தில் -- எங்தெந்தத் துறையில் எடுத்தாலும் அந்தந்தத் துறையில் அண்ணா அவர்கள் சிறப்படைந்துள்ளதால்தான், எல்லாரையும் விட அண்ணா மிக உயர்ந்த மனிதராக இருக்கிறார்.

யாரும் பதவியைப் பெறலாம்—பட்டத்தைப் பெறலாம்—பணத்தையும் பெறலாம்; ஆனால், பலரது இதயங்களில் இடம் பெறுவது எளிதல்ல! கட்டிய மனைவி இதயத்தில்கூட இடம் பெருதவர்கள் பலர் இருக்கிறார்கள்; அவர்களெல்லாம், வையத்தில் வாழ்வாங்கு வாழத் தெரியாமல் தவறியவர்களாவார்கள்!

நூருண்டு நூருண்டாகப் பெருமையை நிலைநாட்டுபவர்கள் ஒரு சிலர்தான் உண்டு என்பதை விரல்விட்டு எண்ணிவிடலாம்—காந்தி ஜவகர்லால் நேரு போன்றவர்களை!

தமிழகத்தைப் பொறுத்த வரையில், பகைவரிடத்தில்கூட அண்ணா சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறார்; அதற்குக் காரணம், பலர் முயன்றும் பெற முடியாத சிறப்புக்கள், அண்ணாவிடம் உள்ளதுதான்!

அண்ணாவைப் பாராட்டுவது என்ருல், அவரைப் பாராட்டுவது என்ற வெறும் நோக்குமட்டுமல்ல -- அத்தகைய பண்புக்கு நம்மையும் ஆளாக்கிக்கொள்ள வேண்டுமென்பதுதான்!

புத்தர் எடுத்துக்காட்டாக விளங்குவது போன்று—இயேசு எடுத்துக்காட்டாக விளங்குவது போன்று — காந்தியடிகள் விளங்குவதுபோன்று — ஆபிரகாம் லிங்கனைப் போன்று அண்ணா விளங்குகிறார்.

சொல்லுக்கு இலக்கணம் கூற வந்த வள்ளுவர், 'எழுதுவதெல்லாம் சொல்லல்ல — இரண்டு மூன்று எழுத்தைக்கூட்டி எழுதுவது சொல்லல்ல—கேட்டார் பிணிக்குத் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்' என்ருர்.

அந்தவகையில், கேளாத பகைவர்களும் விரும்பிக் கேட்கவரும் அளவுக்குச் சொல்லாட்சி புரியும் நல்லாட்சி கொண்டவர் நமது அண்ணா!

எந்தக் கருத்தை எடுத்தாலும், தெளிவாக --- குழப்பமில்லாமல் கூறுவார்; காரணம், ஆழ்ந்த கல்வியறிவு அவரிடம் இருப்பதுதான்!

"பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்பொழுதே கல்லூரி நேரத்தைத் தவிர மற்ற நேரத்திலெல்லாம் நூலகத்தில்தான் இருப்பார்"

என்று பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நண்பர் ஏ. பி. சனார்த்தனம் வெளியிட்டுள்ள அண்ணா ஆங்கில மலரில் எழுதியிருப்பதைக கவனத்தில் கொள்ள வேண்டும்.

#### ஒரே ஒரு உதாரணம்

எழும்பூரைவிட்டு இரவு மெயில் ஓடிக்கொண்டிருக்கும்; அண்ணா அவர்கள் ஏதாவது ஒரு புத்தகத்தைப் படிக்கத் துவங்குவார்; அவருடன்கூட இருப்பவர்களில் சிலர், விழுப்புரம் வருவதற்குள் தூக்கத்தில் வீழ்ந்துவிடுவர்! மெயில், கடலூரைத் தாண்டாது --- மற்றவர்களையும் தூக்கம் தழுவிக்கொண்டுவிடும்!

மாயவரம், கும்பகோணம் இரயில் நிலையங்களையெல்லாம் மெயில் தாண்டிவிடும் --- தூங்கிவழியும் எங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்! தஞ்சாவூர் சந்திப்பு வந்ததும் நாங்கள் விழித்தெழுவோம்!

**இரயில் ஓட்டத்திலும் படித்து --- பல பக்கங்கள் ஓடிய புத்தகமும் கையுமாக பொழுது புலரும் அந்த நேரத்தில் அண்ணா அவர்கள் காட்சி தருவார்!**

புத்தகம் படிப்பதென்ருல், அண்ணா அவர்களுக்கு அவ்வளவு ஆர்வம்! எடுத்த புத்தகத்தைப் படித்து முடிக்காமல் கீழே வைக்கமாட்டார்!

ஆனல் நம்மில் பலரோ, தூக்கத்துடன் பெரும் போர் நடத்துவோம்! 'இரவுத் தூக்கத்தை ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும்' எனத் தோன்றும்! 'நாளை படிக்கலாமே' என்ற எண்ணமும் மேலிட்டு -- எடுத்த புத்தகத்தை நழுவவிட்டு -- தூக்கத்துடன் தொடுத்த போரில் நாம் சாய்ந்தேவிடுவோம்!"

#### அமைச்சர் மாதவன்

விழாவில் சட்ட அமைச்சர் திரு. மாதவன் பேசுகையில்,

"எந்தச் சூழ்நிலையிலும் மனிதப் பண்பை மறக்காதவர் அண்ணா"

என்று குறிப்பிட்டார்.

#### அமைச்சர் முத்துசாமி

"இளைஞர்களைக் கவர்ந்தவர் தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்தவர் இப்போது, இந்தியத் துணைக் கண்டத்துக்குச் சொந்தமாகி விட்டார்; நாளை உலகத்திற்கே சொந்தமாகப்போகிருர்"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

### அதிருப்தியை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழும் நம்பிக்கை ஒன்றை உற்பத்தி செய்துவிட முடியாது.

சிறுபான்மையினரின் உண்மையான கருத்துக்களைப் புறக்கணிக்கும் வகையில் பெரும்பான்மையினர் நடந்து கொண்டால், அதில், வன்முறையின் சுவை வந்துவிடும்.


சிசர்ஸ் போட்டியில் சேருங்கள் —

'முகச்சாயலைப் பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்'

பெறுவீர் ரூ. 30,000

முதல் பரிசு ரூ. 19,000
2வது பரிசு ரூ. 8,000
3வது பரிசு ரூ. 3,000

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:


நீங்கள் பார்க்கும் 10 முகச்சாயல்களும் பிரபல இந்திய திரைப்பட நட்சத்திரங்களினுடையவை. "இதை விடை அனுப்பும் பாரமாக உபயோகிக்கவும்" என்று குறிப்பிடப்பட்டுள்ள கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக 1 என்று குறிப்பிடப்பட்டுள்ள முகச்சாயலைக் கொண்ட நட்சத்திரத்தின் பெயரை எழுதுங்கள். (உதாரணம்: முகச்சாயல் 1 'விமி'யினுடையது என்று நீங்கள் நினைத்தால் கட்டத்தில் 1-ம் நம்பருக்கு எதிராக 'விமி' என்று எழுதுங்கள்.) இவ்விதமாகவே 1 முதல் 10 வரை எல்லா காலி இடங்களையும் பூர்த்தி செய்யுங்கள். பிறகு கோரப்படும் இதர விவரங்களையும் பூர்த்தி செய்து, 5 (ஐந்து) காலி சிசர்ஸ் சிகரெட் பாக்கெட்டுகளையும் சேர்த்து முற்றிலும் பூர்த்தி செய்யப்பட்ட விடை பாரத்தை கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதாவதொன்றுக்கு அனுப்புங்கள். 40 திரைப்பட நட்சத்திரங்களின் பெயர் பட்டியலை நாங்கள் கொடுத்துள்ளோம். இங்கு கொடுக்கப்பட்டுள்ள முகச்சாயல்கள் இந்தப் பட்டியலிலுள்ள 10 திரைப்பட நட்சத்திரங்களினுடையவை.

திரைப்பட நட்சத்திரங்களின் பெயர்கள்:

சுஜித் குமார், தேவ் ஆனந்த், அச்லா சச்தேவ், ஆகா, சஞ்ஜய், ஆஷா பரேக், நிருபராய், மீனா குமாரி, சஷிகலா, ஷர்மிளா டாகுர், மதுமதி, பிரேம் சோப்ரா, அஸ்ரா, பர்யால், சாயிதா கான், பிஸ்வஜித், ஜெய்சங்கர், ஹர்நாத், பி.காஞ்சனா, வஹிதா ரஹ்மான், மாலா சின்ஹா, அஞ்சு மகேந்திரு, சஷிகபூர், சைரா பானு, பிரோஸ் கான், இந்திராணி முக்கர்ஜி, சிமி, காமினி கௌசல், விமி, நாஜ், பபிதா, மும்தாஜ், ஸோனியா சாஹ்னி, ஜெப் ரஹ்மான், பிரான், எம். ராஜஸ்ரீ, கே. விஜய நிர்மலா, கிருஷ்ணா, ஏ.வி.எம் ராஜன், வாணிஸ்ரீ.

முக்கிய விதிகள்: இப்போட்டியில் கலந்து கொள்ளும் ஒருவர் எத்தனை விடைகள் அனுப்பியிருந்தாலும் எந்தச் சூழ்நிலையிலும் அவர் ஒரு பரிசுக்குமேல் பெறுவதற்கு தகுதியுடையவராகார். சரியான விடை பத்திரிகைகளில் வெளியிடப்படும். இந்தப் போட்டியில் இந்தியாவில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இந்தியப் பிரஜைகள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

சிகரெட் கடைகளில் கிடைக்கும் விடை அனுப்பும் பாரங்களில் முழு விதி, நிபந்தனைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.







முடிவு தேதி நவம்பர் 15, 1968 வரை நீடிக்கப் பட்டு உள்ளது.

இங்கே கத்தரிக்கவும்

இதை விடை அனுப்புவதற்கான பாரமாக பயன்படுத்தவும்
(இங்கு பெயர்களைப் பூர்த்தி செய்யவும்)

| | |
|---|---|
| 1. | 6. |
| 2. | 7. |
| 3. | 8. |
| 4. | 9. |
| 5. | 10. |

விடை அனுப்பும் பாரங்களில் 'சிசர்ஸ் போட்டி' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவற்றை இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்டின் அலுவலகங்கள் ஏதேனும் ஒன்றுக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் பை எண் 5029 மதராஸ்-1 தபால் பெட்டி எண் 12, விசாகப்பட்டினம் 1. தபால் பெட்டி எண் 1620 கோயமுத்தூர்-18.

தயவு செய்து பெரிய எழுத்துக்களில் எழுதவும்

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

..............................

வயது .............. தொழில் ..............................




சிசர்ஸ் சிகரெட்டுகள் தயாரிப்பவர்களால் நடத்தப் படுகிறது.

# அண்ணா உடல்நிலை திருப்திகரம்

## அக். 24-ல் உடல் சோதனை நடைபெறும்

சென்னை, அக். 11—

முதலமைச்சர் அண்ணா அவர்கள், நியூயார்க் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட பிறகு இப்போது நன்கு குணமடைந்து வருகிறார்கள்.

இத்திங்கள் 24-ம் நாளன்று மறுபடியும் ஒரு தடவை உடல் நிலையை டாக்டர்கள் சோதித்துப் பார்க்கப்போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

உடல்நிலையில் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது; அவரது உடல்நிலை திருப்திகரமாக உள்ளது.

இந்த விவரங்களை, ஐ. நா.-விலுள்ள திரு. ஜி. பார்த்தசாரதி, முதலமைச்சரின் செயலாளர் திரு. சொக்கலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே, அறிஞர் அண்ணா சென்னை வந்ததும் தங்குவதற்காகத் தோட்டம் உள்ள பெரிய வீடு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

# மத்திய அரசின் செயல் பெருமை தருவதாக இல்லை

## ஒரு நாள் வேலைநிறுத்தத்துக்காகப் பழிவாங்க வேண்டாம்

### உள்துறையமைச்சருக்கு முரசொலி மாறன் மடல்

சென்னை, அக். 12—

"அரசியல் அமைப்பின்படியும் தொழிற் சங்கச் சட்டப்படியும் உள்ள உரிமையின்படி, ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ததை, நெருக்கடி நிலை உள்ளபோது மட்டுமே பயன்படுத்தக்கூடிய அவசரச் சட்டம் போட்டு நசுக்கியதும், இன்னும் அமைதி ஏற்படா வண்ணம் நீடித்திருப்பதும் இந்த அரசுக்குப் பெருமை தருவதாக இல்லை!

"அடக்குமுறையால் ஏற்பட்ட தழும்புகளையும், அதனால் ஊழியர்கள் மனத்தில் தோன்றியிருக்கும் மனக்குறையையும் மத்திய அரசு போக்கத் தவறியதோடன்றி, ஒருநாள் மட்டுமே எழுந்த ஒரு தற்காலிகச் சூழ்நிலையை அரசு நிரந்தரமாக்கி இருப்பது எந்த நன்மையைக் கருதி என்பது தெரியவில்லை!

"அடிமை நிலையில் ஆணையிடப்படும் ஊழியர்களிடமிருந்து அல்ல -- தாங்களே விரும்பி உழைக்கும் ஊழியர்களிடமிருந்துதான் பொதுமக்கள் நல்ல சேவையை எதிர்பார்க்க முடியும்."

இவ்வாறு, முரசொலி மாறன் எம்.பி. அவர்கள், ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்த மத்திய அரசு ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுத்ததற்குக் கண்டனம் தெரிவித்து, உள்துறை அமைச்சர் சவானுக்கு எழுதியுள்ள மடலில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மடலின் நகலை இரயில்வே அமைச்சர் பூனச்சா, அஞ்சல்--தந்தித் துறை அமைச்சர் ஆகியோருக்கும் அவர் அனுப்பியுள்ளார். அம்மடலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"சோஷலிச நோக்கத்திற்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் ஓர் அரசு அவசரச் சட்டம் போட்டு பிரச்சினையை அணுகியது; சோஷலிச இலட்சியத்திற்கும்—அதைக் கடைபிடிப்பதாகச் சொல்பவர்களுக்கும் இது பெருமை தருவதாக இல்லை.

பிரச்சினைகளை நடுவர் குழுவிற்கு விடச்சொல்லி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் 20 ஆண்டுக்கால சர்வீசை இழந்து பரிதவிக்கும் ஒரு ஊழியர் எப்படி நிம்மதியுடன் பணியாற்ற முடியும் என்பதை ஒரு மனிதாபிமான பிரச்சினையாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

தமிழக அரசு போன்ற மாநில அரசுகள் காந்தியார் நினைவாகக் கைதிகளின் தண்டனையைக் குறைத்திடும் நேரத்தில் மத்திய அரசு, சிறைச்சாலைகளைத் திறந்துவிட்டு -- அதை நிரப்பிக் கொண்டிருக்கிறது!

25 இலட்சம் மத்திய அரசு ஊழியர்கள் மட்டுமல்ல -- அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் -- அவர் ஆதரவில் வாழ்வோர் -- என்று கணக்கெடுத்தால், இந்தப் பழிவாங்கும்படலத்தினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் -- இந்த நாட்டின் நாடி நரம்புகளாக இருப்பவர்கள் கோடிக்கணக்கானவர்கள் என்பதையும் உணர்ந்து, காந்தியார் நினைவிற்குப் பெருமை தேடுவதற்கும் அவர்களுக்குப் பின்னால் அவர் மதிக்கும் மனிதாபிமானக் கொள்கைகள் அவர் சீடர்களால் போற்றப்படுகின்றன என்பதை நிலைநாட்டுவதற்குமாவது மத்திய அரசு உடனடியாக முன்வந்து, ஊழியர்களின் மனக்கசப்பையும் -- அச்சத்தினையும் -- வெறுப்பினையும் போக்கி, சகஜ நிலையையும், இருதரப்பாரும் இணைந்து பணியாற்றுகிற அமைதிச் சூழ்நிலையையும் உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

## சென்னை 17-வது வட்ட

### தேர்தல் பிரசாரத் துவக்க விழா

சென்னை 17-வது வட்ட தி.மு.க. தேர்தல் அலுவலகத் திறப்பும் பிரசாரத் துவக்க விழாவும் 14—10—68 இரவு 8-மணியளவில் அம்மன் கோயில் தெருவில் பி. சி. கந்தசாமி தலைமையிலும்—சி. கோவிந்தராசன் முன்னிலையிலும் நடைபெறும்; பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி திறந்துவைப்பார்; வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., நீலநாராயணன், வி. முனுசாமி எம்.சி., அ. செல்வராசன் எம்.சி. ஆகியோர் கலந்துகொள்வர்.

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

### 13--10--68

**திண்டுக்கல்**

6-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: எம். எஸ். சுப்பிரமணி; பேசுவோர்: கே. எஸ். சந்தானம் எம்.சி., பொன். சீனிவாசன், க. அங்குசாமி எம்.சி., என். முத்து, இரா. கிருட்டினன்.

**சிவகாசி**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு தங்கமணியம்மாள் காலனியில்; தலைவர்: முத்துச்சாமி (மணி); பேசுவோர்: வெ. கண்ணன், கே. துரைப்பாண்டியன் எம்.சி., ஏ. துரைக்கண்ணன், எஸ். ஏ. ரசாக், கா. மு. மதார், எஸ். எம். பொன்னுசாமி, மற்றும் பலர்.

**கடலூர்**

14-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு திருப்பாப்புலியூர் அக்கின் நாயுடு வீதியில்; தலைவர்: கே. எஸ். ஏ. லத்தீப்; பேசுவோர்: ப. உ. சண்முகம் எம்.எல்.சி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., புலவர் அறிவுடைநம்பி, என். இராசாங்கம் எம்.எல்.ஏ., ஏ. வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன், இரெ. திருமங்கை, கே. செயராமன் எம்.சி., மற்றும் பலர்.

**சுந்தரர்பாடி**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு திரௌபதியம்மன் கோயில் திடலில்; தலைவர்: இரா. கோவிந்தன்; பேசுவோர்: வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., என். இராசாங்கம் எம்.எல்.ஏ., கே. ஆர். சபாபதி, ஏ. வி. தண்டபாணி, புருடோத்தமன், வி. வீரராகவன், ஏ. மணி, கி. காத்தமுத்து, ந. சீதாராமன். (டேப் இராமச்சந்திரன்—சாந்தா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**நெல்லை**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு எம். ஜி. ஆர். திடலில்; தலைவர்: இரா. சுடரொளி; பேசுவோர்: ஏ. பி. மனோன்மணி, இரத்தினவேல்பாண்டியன், ஏ. எல். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., ஆலடி அருணா எம்.எல்.ஏ., அப்துல் மஜீத் (நகராட்சித் தலைவர்), பத்மநாபன் எம்.சி., மற்றும் பலர்.

**புதுவை**

நகர தி. மு. க. சார்பில், மாலை 6 மணிக்கு ஒதியஞ்சாலைத் திடலில்; தலைவர்: சி. பி. திருநாவுக்கரசு; பேசுவோர்: உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., எம். ஏ. சண்முகம், சு. ம. சுப்பராயன், கு. முருகையன், ஜி. பெருமாள்ராஜா, செ. கோவிந்தராசன், எஸ். ஆறுமுகம், மு. கிருட்டினராசு.

**குருக்கத்தி**

தி. மு. க. உழவர் மன்றம் சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: வை. உத்தண்டி; பேசுவோர்: கோ. சி. மணி எம்.எல்.சி., கே. வி. இராமையா, சு. தென்கோவன், எஸ் தியாகராசன், எஸ். விசுவநாதன், பொ. கணபதி, கோ. சிங்காரம், மற்றும் பலர். (மாலை 4 மணிக்கு உள்ளாட்சி மன்றத்தில் கோ. சி. மணி பெரியார் படத்தைத் திறந்து வைப்பார்; கீழ் வேளூ[illegible]ரிலிருந்து ஊர்வலம் புறப்படும்.)

**அனுமந்தக்குடி**

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு பள்ளிவாசல் திடலில்; தலைவர்: சொ. இராமநாதன்; பேசுவோர்: கரு. இராம. கரிய மாணிக்கம் எம்.எல்.ஏ., நவமார்க்கண்டேயன், ஏ. ஆர். சிவப்பிரகாசம், கே. பெருமாள், ஏ. ஆரோக்கியசாமி, இராம. வெள்ளையன், கோ. சண்முகம், அ. சேக்பகர் முகம்மது, கா. செல்லம். (இரவு 10-30 மணிக்கு, புதுக்கோட்டை ஏ. எம். விசயன் குழுவினரின் 'தமிழக அரசு' என்னும் சதம்ப நாடகம் நடைபெறும்.)

**சென்னை 34-வது வட்டம்**

தி. மு. க. வேட்பாளர் எம். ஏ. அக்கீம் அவர்களை ஆதரித்து மாலை 7 மணிக்கு மாணிக்கச் செட்டித் தெருவில்; தலைவர்: நீலமேகம்; பேசுவோர்: டி. கே. சீனிவாசன், எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ., மு. மாசிலாமணி, கேரளீயன், து. கணபதி, மற்றும் பலர்.

**சேலம்**

25-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு வாணிய அப்பு செட்டி தெரு எஸ். எம் கவுஸ் திடலில்; தலைவர்: பி. ஒஜிர்ஜான்; பேசுவோர்: வீ. கன்னியப்பன், கே. ஜெயராமன் எம்.எல்.ஏ., சிற்றுளி சுப்பிரமணியம், சி. பழனியப்பன் எம்.சி., ஏ. மாரியப்பன் எம்.சி., எஸ். ஆறுமுகம், கே. எஸ். மணி ஆ. கன்னையன்.

**மதுரை**

தியாகி சின்னசாமி நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு பச்சை நாச்சியம்மன் கோயில் திடலில் (டவுன்ஹால் ரோடு அருகில்); தலைவர்: எம். அறிவழகன்; பேசுவோர்: கே. ஆர். பி. மணிமொழியன், சோணையா, கு. திருப்பதி, டி. ஆர். இராசன், சொ. காவேரிமணியன், கூடலரசன்.

**விழுப்புரம்**

வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மந்தைக் கரையில்; தலைவர்: ஏ. கிருட்டினமூர்த்தி; வரவேற்புரை: கோ. செயராமன்; பேசுவோர்: அமைச்சர் மாதவன், மு. சண்முகம் எம்.எல்.ஏ., எம். இராமன் எம்.எல்.ஏ., பாவலர் அப்துல் வாகாப், புலவர் வேங்கை மார்பன், எஸ். கோவிந்தசாமி, சி. கே. எஸ். பாண்டியன், கே. வி. இராமகிருட்டினன், மற்றும் பலர்.

**சென்னை 86-வது வட்டம்**

தி. மு. க. தேர்தல் பிரசாரக் கூட்டம்; மாலை 6 மணிக்கு, சேப்பாக்கம் சி. என். கிருஷ்ணசாமி சாலையில்; தலைவர்: ஆ. வி. அகிலன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., க. அறிவழகன் எம்.எல்.சி., சிட்டிபாபு எம்.பி., மற்றும் பலர்.

### 14--10--68

**சென்னை 33-வது வட்டம்**

தி.மு.க. தேர்தல் பிரசாரக் கூட்டம்; இரவு 8 மணிக்கு வைக்கோற்காரன் தெருவில்; தலைவர்: தட்சிணாமூர்த்தி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், டாக்டர் ஹண்டே எம்.எல்.ஏ., இளம்பரிதி, மு. கன்னியப்பன் எம்.சி.

**சென்னை 40-வது வட்டம்**

39-வது வட்ட தி.மு.க. வேட்பாளர் டபுள்யூ. பி. பி. சுந்தரம், 40-வது வட்ட தி.மு.க. வேட்பாளர் பொ. கு. இராமதாசு ஆகியோரை ஆதரித்து இரவு 7 மணிக்கு இராசப்பசெட்டி தெருவில்; தலைவர்: ந. வேந்தன்; பேசுவோர்: கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ., ஏ. நெடுமாறன், கூ. மா. மாசிலாமணி, த. சேதுராசன், தமிழழகன், மற்றும் பலர்.

**சென்னை 5-வது வட்டம்**

தேர்தல் பிரசாரக் கூட்டம்; மாலை 7-மணிக்கு சோலையப்பன் தெருவில்; தலைவர்: சி. இராசகோபால்; பேசுவோர்: அமைச்சர் கருணாநிதி, ஆலடி அருணா எம்.எல்.ஏ., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., மு. இராமையா, எஸ். தவசிமுத்து, எம். எஸ். கே. உலகநாதன், த. சேதுராசன், ஆர். எஸ். லிங்கராஜ், மற்றும் கழக -- தோழமைக் கட்சி வேட்பாளர்கள் பேசுவர்.

**வல்லம்**

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு மாரியம்மன்கோயில் திடலில்; தலைவர்: பெ. கோபால்; பேசுவோர்: திருவாரூர் கே. தங்கராசு, வீ. அ. பழனி, இரா. இராசகோபால், தா. பா. ஜான், மற்றும் பலர்.

தமிழக மின்சார வாரியம்

**டெண்டர் விளம்பரம்**

குறிப்பு எண் SCE. 72

"எண்ணூர் அனல் மின் திட்ட வேலைத்தளத்தில் ஒரு வருட காலத்திற்கு மரக்கறி உணவு விடுதி நடத்துதல்" என்று குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள்சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளான அக்டோபர் 7-ந் தேதி என்பது, **அக்டோபர் மாதம் 25-ந் தேதி 3 மணி ஆக நீடிக்கப்பட்டுள்ளது.**

**தலைமை நிர்மாணப் பொறியாளர்,**

எண்ணூர் அனல் மின் திட்டம்,

எண்ணூர், சென்னை-57

## செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம்

"செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. குழுக் கூட்டம் 20—10—68 காலை 10-மணியளவில் மேற்குத் தாம்பரம் பேபி உயர் தொடக்கப் பள்ளியில் (காவல் நிலையம் எதிரில்) நடைபெறும்; மாவட்டத்தில் கழக வளர்ச்சி குறித்தும், வரும் நகராட்சித் தேர்தலில் கழகம் மேற்கொள்ள வேண்டிய பணி குறித்தும் ஆராயப்படும். எல்லா மாவட்டப் பிரதிநிதிகளும், மாவட்டத்தைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கக் கோருகிறேன்"

என்று செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

## சென்னை 49-வது வட்ட தேர்தல் அலுவலகத் திறப்பு

சென்னை 49-வது வட்டத் தி. மு. கழகத் தேர்தல் அலுவலகத் திறப்பு விழா 13—10—68 காலை 10 மணிக்கு ஸ்டிரான்ஸ் ரோடு, 128-ஆம் எண் இல்லத்தில் நடைபெறும்; அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் திறந்துவைப்பார்; மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்; கழக வேட்பாளர் தோழர் சு. பாலன் அவர்களை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரத்தை திரு. என். வி. என். அவர்கள் துவக்கிவைப்பார்.

## வண்ணைப் பகுதி வேட்பாளர்கட்கு:

13—10—68 அன்று வண்ணைப் பகுதி தி. மு. க. சார்பில் நடைபெறவிருக்கும் தேர்தல் பிரசார ஊர்வலம் அந்தந்த வட்டத்துக்கு வரும்போது, அந்தந்த வட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழமைக் கட்சி வேட்பாளர்கள், தனியாக அலங்கரிக்கப்பட்ட சைக்கிள் ரிக்ஷா ஒன்றில் அமர்ந்துவர ஏற்பாடு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-[illegible]) [illegible]